பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 10 வெள்ளிக்கிழமை (25-12-1992) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 29

# நரசிம்மராவ் அரசுக்கெதிராக ஜெயலலிதா போர்க்கோலம்!

## ஷெல் தாக்குதல்

ஏழாலை, டிச. 25

பலாலி முகாமில் இருந்து நேற்றுக் காலை 10-30 மணியளவில், குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குப்பிளான், புன்னாலைக் கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

அதேசமயம் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. [ஓ-45-15]

## எம்.ஜி.ஆர். சமாதிக்கு நேற்று பேரணியாகச் சென்று சூளுரை

சென்னை, டிசம்பர் 25

தமிழகத்தில் ஆளும் அ. தி. மு. கவுக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் நிலவிய கூட்டு உடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்தியில் ஆட்சியிலிருக்கும் இந்திரா காங்கிரஸ் அரசின் அரசியல் ஆதிக்கத்துக்கும் பொருளாதாரக் கொள்கைக்கும் எதிராகப் போராடுவது என அ. தி. மு. க. அரசின் தலைவியான ஜெயலலிதா சூளுரைத்திருக்கிறார்.

*எம். ஜி. ஆர். நினைவு நாளான நேற்று ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சகிதம் பேரணியாக எம். ஜி. ஆர். சமாதிக்குச் சென்று அங்கு ராவ் அரசுக்கு எதிராக ஜெயலலிதா உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.*

இந்திரா காங்கிரஸ்— அ. தி. மு. க. கூட்டு உடையும் நிலை ஏற்படும் என பத்திரிகைகளில் அடுத்தடுத்து செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கும் வேளையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா காங்கிரஸுக்கு எதிராக உறுதிமொழி எடுத்திருப்பது அச்செய்திகளை ஊர்ஜிதப் படுத்தியிருக்கிறது.

சென்னை மெரினாவிலிருக்கும் எம். ஜி ஆர். சமாதிக்கு பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் சகிதம் பேரணியாக செல்வி ஜெயலலிதா சென்றார். அங்கு—

★ மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைக்கும் அர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாரதீய ஜனதா கட்சியுடன் ஜெயலலிதா நெருங்குகிறார்

சென்னை, டிச. 25

தனது தோழமைக் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் கடந்த சில மாதங்களாக அடிக்கடி முரண்பட்டு வரும் அ. தி. மு. தற்போது பாரதீய ஜனதா கட்சியுடன் நெருங்கிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

பொதுமேடைகளில் அ. தி. மு. க. பிரமுகர்கள் காங்கிரஸை தாக்கியும் வருகின்றனர். இதனை ஜெயலலிதா கண்டும் காணாதது போல் இருந்து வருகிறார். இத்தகைய போக்கை அவர் உற்சாகப்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

அயோத்தி பிரச்சினையில் அ. தி. மு. அரசு, பாரதீய ஜனதா கட்சியை ஆதரித்து வந்ததும்—

பாரதீய ஜனதா கட்சியின் நெருங்கிய சகாவான தடை செய்யப்பட்ட விஷ்வ இந்து பரிஷத் தலைவர்களுக்கு தமிழகத்தில் புகலிடம் கொடுத்திருப்பதாகவும், பாரதீய ஜனதா கட்சிக்கு ஆதரவாக அ. தி. மு. கவினர் திரைமறைவில் செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுவது —

நரசிம்மராவ் அரசுக்கு சவாலாகவும், அதேசமயம் பா. ஜ. கட்சியுடன் அ. தி. மு. க. நெருங்கி வருவதையுமே காட்டுகிறது என்று அரசியல் அவ

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் மோதல்

கொழும்பு, டிச. 25

அம்பாறை மாவட்டம் — அக்கரைப்பற்றுப் பகுதியில் பொலீஸ் கொமாண்டோக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் இடம் பெற்றதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்தது (உ-எ)

## விரைவில் புலிகளை வெற்றி கொள்வோம்

### இப்படிக் கூறுகிறார் ஹமில்டன்

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் விரைவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெற்றி கொள்வோம்.

கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய கடற்படை அதிகாரிகள் மத்தியில் பேசுகையிலேயே ஜெனரல் வனசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்

"நாடு இக்கட்டான சூழ்நிலை ஒன்றை எதிர் நோக்கியுள்ளது. இக்கட்டத்தில் புதிதாக நியமனம் பெற்ற கடற்படை அதிகாரிகளுக்கு பாரிய பொறுப்புகள் உள்ளன.

தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் புதிய கடற்படை அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர்" — என்றும் அவர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி




அப்ப .. மங்கம்மா சபதம் எண்டு சொல்லுங்கோ...... !

இன்றைய கிறிஸ்தோதயத் திருநாளில்

வாசகர்தள், விளம்பரதாரர்கள்,
செய்தியாளர்கள், விற்பனையாளர்கள்,
ஆதரவாளர்கள், அபிமானிகள், அன்பர்கள்
அனைவருக்கும்

**உதயனின் நத்தார் நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக!**

## செட்டிகுளம் தமிழர்களின் வீடுகள் பல தரைமட்டம்!

யாழ்ப்பாணம், டிச 25

வவுனியா — செட்டிகுளம் பகுதியில் இருந்த தமிழர்களின் வீடுகள் பல இராணுவத்தினரால் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்குள்ள பாடசாலையிலும் தேவாலயத்திலும் இராணுவத்தினர் முகாம்களை அமைத்துள்ளனர் என்றும் —

அப்பகுதிகளில் சுமார் எண்ணூறு வீடுகளை அமைத்து சிங்களவரைக் குடியமர்த்தவும் ஏற்பாடாகி வருகிறது என்றும் மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செட்டிகுளம் பகுதியை அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கும் ஒரு திட்டத்துடனேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கருதப்படுகிறது. (ஓ-5)

## கிளாலிப் படகுப் பயணி எடுத்து வந்த மர்மப் பை!

யாழ்ப்பாணம், டிச. 25

கடந்த வாரம் கிளாலிக் கடலில் பயணம் செய்த ஒருவர் கொண்டுவந்த பயணப்பொதி ஏனைய பயணிகளை மூக்கில் விரலை வைக்கச் செய்தது!

சம்பந்தப்பட்ட பயணி அந்த "மர்மப் பை"யை பாதுகாப்பாக வைப்பதற்கு கொடுக்க மறுத்ததினால் ஏனையோர் பதற்றமடையவும், சங்கடப்படவும் நேர்ந்தது!

கிளாலிக் கடலில் போகும் படகுகள் மீது கடற்படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்துகிறார்கள் என்று தெரிந்தும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பயணம் செய்யத் துணிந்தனர் சில பயணிகள்.

ஆலங்கேணிக் கரையிலிருந்து படகு புறப்பட ஆயத்தமாகியது. படகோட்டி பயணிகளின் பொதிகளைப் பாதுகாப்பாக "என்ஜின்" அறைக்குள் வைப்பதற்காக அவற்றை எல்லோரிடமும் பெற்றுக் கொண்டார்.

பயணிகளில் ஒருவர் இரண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## லைசென்ஸ் பெறாத சைக்கிள்காரர்கள் மீது மாநகரசபைக் குழு பாய்ச்சல்!

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ்ப்பாணம் மாநகரசபையின் திடீர் பரிசோதனைக் குழுவினர் நேற்றுக் காலை துவிச்சக்கர வண்டிக்காரர் மீது பாய்ச்சல் நடத்தினர்.

யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதி வழியாகச் சென்ற சகல துவிச்சக்கர வண்டிக்காரர்களையும் திடீர் பரிசோதனைக் குழுவினர் வழிமறித்தனர். அவர்களிடம் 1992 ஆம் ஆண்டுக்குரிய லைசென்ஸ் இலக்கத் தகடு இருக்கிறதா என்று சோதித்தார்கள். அத்தகடு இல்லாதவர்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள மின்சார நிலையத்துக்கு கூட்டிச் சென்றனர். அங்கு வைத்து உரிய கட்டணம் பெற்று லைசென்ஸ் இலக்கத் தகடுகளை வழங்கினர்.

நேற்றுக் காலை ஆயிரத்துக்கும் மேற்பட்ட சைக்கிள் சொந்தக்காரர்கள் இந்த வரு

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளாகள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்

**ஜெயா பன்ஸி ஹவுஸ் ஸ்தாபனத்தார்**

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான

- ★ தரமான இமிற்றேசன் சோடனை நகைகள்,
- ★ எவர் சில்வர்
- ★ லேஸ், நூல் வகைகள்.
- ★ சிறுவர் விளையாட்டுப் பொருள்கள்,
- ★ வெளிநாட்டு உள்நாட்டு அழகுசாதனப் பொருள்கள்

ஆகியவற்றை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

**ஜெயா பன்ஸி ஹவுஸ்**

160, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

**ஜெயா அழகு சாதன மாளிகை**

177 A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(23780)


# இன்று

யாழ்ப்பாணம், டிச 25

நத்தார் தினத்தையொட்டி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் இன்று இரவு 8 மணிக்கு கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

(ஓ-30)

★ ★ ★

''மனிதனின் குருதியும் மாற்றீடும்'' என்ற தலைப்பிலான மாணவர்களுக்கான கருத்தரங்கு, இன்று பிற்பகல் 3 மணிக்கு, யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது.

ஓ)

# நாளை

யாழ்ப்பாணம் டிச 25

மானிப்பாய் அசம்பளி ஒவ் கோட் ஆலயத்தின் ஜெப நிலையத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு வாலிபர் நிகழ்ச்சி இடம்பெறும். (க)

# போஷாக்கு பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 25

போஷாக்கு பற்றிய கருத்தரங்கு ஒன்று கொக்குவிலில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக கலந்துரையாடல் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் திரு. சொ. யோகநாதன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் டாக்டர் ந. சிவராசா, யாழ். மருத்துவபீட மாணவர்களனா திரு.ரி. சுரேஷ்குமார், செல்வி ஏ. தியாகராஜா, திரு. என். ஞானசுதன் ஆகியோர் போஷாக்கின் பல்வேறு அம்சங்கள் பற்றி உரை நிகழ்த்துவார்கள் (க)

# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச 25

எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப் பட்டிருந்த வலய ஆலோசகர்களுக்கான செயலமர்வும் கருத்தரங்கும் மறுஅறிவித்தல் வரை பின்போடப் பட்டுள்ளதாக யாழ். கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# கூண்டோடு விலகினர்

கொழும்பு, டிச. 25

சம்பளத் தகராறு காரணமாக பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கூண்டோடு பதவி விலகி விட்டனர்.

பதவி விலகல் கடிதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை உபவேந்தர்களிடம் கையளிக்கப் பட்டன.

பதவி விலகல் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

## விரைவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மேலும் சொன்னார்

யாழ். கோட்டை, ஆனையிறவு யுத்தங்களில் இராணுவத்தினர் கடற்படையினருடன் சேர்ந்து செயற்பட்டதையும் அந்த மோதல்களில் கடற்படையினர் ஆற்றிய பங்களிப்பையும் அவர் நினைவு கூர்ந்தார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகராவும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்.

ஓ-எ

# 100கோடி ஆண்டுகள் வரை பூமியின் ஆயுள் நீடிக்கும்!

## அதற்கு இப்போது அழிவில்லை

லண்டன், டிச. 25

பூமியின் ஆயுள் இன்னும் 100 கோடி ஆண்டுகள் வரை நீடிக்கும். இப்போதைக்கு பூமிக்கு அழிவு ஏற்படாது

லண்டனில் இருந்து வெளிவரும் 'நேச்சர்' என்னும் விஞ்ஞான ஆராய்ச்சி சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வு ஒன்றில் இருந்து இது தெரியவந்து இருப்பதாகவும் அச் சஞ்சிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் ஆயுள் பற்றி கணக்கிடப்பட்டது அப்போது கூறப்பட்ட ஆயுளிலும் பார்க்க பத்து மடங்காக பூமியின் ஆயுள் தற்போது அதிகரித்திருப்பதாக புதிய ஆய்வு மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

பூமியின் ஆயுள் எப்போது முடிவுக்குவரும் என்பது பற்றியும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பூமியில் தாவரங்கள் வாழ்வதற்கு தேவைப்படும் ஆகக் குறைந்த மட்டத்துக்கு காற்றில் உள்ள கரியமில வாயுவின் (Carbon di Oxide) அளவு வீழ்ச்சியடைகின்றதோ அப்போது பூமியின் ஆயுள் முடிந்து விடும் என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-எ)

# மூன்றாவது அரசியல் கட்சி ஆரம்பித்தது முட்டாள்தனம்

## றொனி டி மெல் சொல்கிறார்

கொழும்பு, டிச. 25

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ ல. சு. கட்சி ஆகிய இரண்டுக்கும் மேலதிகமாக மூன்றாவது அரசியல்கட்சி ஒன்றை ஆரம்பித்தது முட்டாள்தனமாகும். மூன்றாவது கட்சிக்கு எதிர்காலமே இல்லை. 21 ஆம் நூற்றாண்டு பிறப்பதற்கு இன்னும் நூறு மாதங்களே உள்ளன. கட்சி அரசியலை மறந்து நாட்டின் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கும் யுகத்தை எதிர் நோக்க நாம் தயாராக வேண்டும்

முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் 'சண்டே ஐலண்ட்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்

உங்கள் மனைவி மல்லிகா டி மெல் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் ஏன் சேர்ந்துகொண்டார் என்று செய்தியாளர் கேட்பதற்கு—

''ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் சேரப்போவதாக மனைவி மல்லிகா என்னிடம் கூறவே இல்லை. அப்படி அவர் என்னைக் கேட்டிருந்தால் சேர வேண்டாம் என்று நான் கூறியிருப்பேன்'' — என்றும் அவர் சொன்னார்

''ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணைபற்றி கருத்து வெளியிடுகையில் அப் பிரேரணை அர்த்தமற்ற ஒரு தஸ்தாவேஜு ஆகும் ஜனாதிபதியை பதவியில் இருந்து வெளியேற்ற முயன்றவர்கள் இவ்வளவு சாதுரியமற்ற முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப் பட்டவர்களுக்கு எந்த நீதிமன்றத்தில் மேன்முறையீட்டைச் சமர்ப்பிப்பது என்று கூட தெரிந்து இருக்கவில்லை''— என்றும் அவர் கூறினார். (த-எ)


**யா / வீமன்காமம் ம. வி.**

**விசேட பொதுக்கூட்டம்**

பெற்றோர் ஆசிரியர் சங்க விசேட பொதுக்கூட்டம்

காலம்;- 27-12- 99ʼ ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்:- மருதனார்மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரி மண்டபம்

விடயம்:- பாடசாலை அபிவிருத்தி தொடர்பானது

மு. கு;- பிரதான கூட்டம் ஆகையால் பெற்றோர், ஆசிரியர், நலன்விரும்பிகளைத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(5467) — அதிபர்



எமது உன்னத தயாரிப்பு

**"உருத்திரா ஜாம்"**

URUTHIRA JAM

இரசாயன கலவைகளோ வேறு விதமான சேர்க்கைகளோ அற்ற முறையில் பதப்படுத்தப்பட்ட

URUTHIRA Jam

சுத்தமான

**திராட்சைத் திரள் பாணி**

பாவனையாளர்களின் அமோக ஆதரவின் மத்தியில் தற்போது எங்கும் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது.

வயோதிபர்கள் முதல் சிறுவர்களுக்கும் ஊட்டச்சத்து வழங்கும் முழுமையான உணவு இது.

உணவுகளுடன் சுவை சேர்க்கவோ அல்லது தனியாகவோ

**விருப்புடன் உட்கொள்ள உகந்தது**

உற்பத்தியாளர்;-

''உருத்திரா'' பலாலி வீதி, ஊரெழு.

(23778)


# 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு: 16 — 04 — 1983



உதிர்வு: 27 — 11 — 1992

## செல்வி நிலாஜினி] அன்ரனி ராஜன்

பத்து வயது வரை பால் நிலவாய் ஒளிர்ந்தாய்
மின்னலென நோயுற்று மறைந்தாய்
நிலவே நிலாஜினி எங்கு சென்றாய்
கண்ணீர்தான் எமக்கு சொந்தம் என்றனையோ?

26-12-92 புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் காலை 6-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, குடும்பத்தினர்.

30, முதலியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(23779)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆயர் வண டி. ஜே. அம்பலவாணர் நத்தார் தினத்தை ஒட்டி எழுதிய சிறப்புக் கட்டுரை.

# இரட்சகர் யேசுவின் அனுபவம் எமது நிலைமையை ஒத்தது

## சமாதானம் வாழ்விற்கு இன்றியமையாதது

'எங்கள் காலத்தில் சமாதானத்தைத் தாரும்' (Give Peace in our time O' Lord) என்ற விண்ணப்பத்தை திருச்சபைகள் தங்கள் வாராந்த ஆராதனைகளில் எப்பொழுதும் ஏறெடுத்து வந்திருக்கின்றன. சமாதானமான காலம், நிலை, ஏதோ ஒரு காலம் வரும் என்பது மக்களின் ஆழ்ந்த ஆவலும், எதிர்பார்ப்பும் என்பது தெளிவு.

அதை மறுவாழ்வில் அனுபவிக்கலாம் அல்லது உலக வரலாறு பூர்த்தியடையும் பொழுது அனுபவிக்கலாம் என்ற நம்பிக்கை எமக்கு எதுவித ஆறுதலையோ நிம்மதியையோ இப்பொழுது கொடுக்கக் கூடுமா என்பதே கேள்வி.

மக்கள் சமாதானத்தைத் தேடி, சமாதானமே மனித சமூக வாழ்விற்கு இன்றியமையாத தேவை என்பதை உணர்ந்து அதற்காக உழைத்து வந்திருக்கிறார்கள். வல்லரசுகளும், பேரரசுகளும் சமாதானத்தை உலகத்தில் நிலைநாட்டுவதே தங்கள் நோக்கம் என்பதைக் கோரியிருக்கின்றன. வரலாற்றில் தோன்றிய பேரரசுகளில் பெரிதாக விளங்கிய ரோம பேரரசு 'ரோம சமாதானம்' (Pax Romana) என்று தங்கள் ஆளுகையை வர்ணித்தார்கள். ஆனால் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சுயாதீனமற்று நசுக்கப்பட்ட அடிமை நிலையே அவ்வரசிற்குள் வாழ்ந்தவர்களின் அனுபவமாயிருந்தது. அப்பேரரசின் பாகத்தில் இருந்த பலஸ்தீன நாட்டில் நடந்தேறிய ஒரு சம்பவத்தையே கிறிஸ்மஸ் பண்டிகையில் நினைவு கூர்ந்து கொண்டாடுகிறோம். அடக்கு முறையின் அவலத்திலிருந்த மக்களுக்கே "பயப்படாதிருங்கள் இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்தசந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று தூதர்களின் செய்தி வந்தது. அந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி "பூமியிலே சமாதானம் மனுஷர் மேல் பிரியம்" என்ற நற்செய்தி.

### எங்கே சமாதானம்? எங்கே பிரியம்?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் வாழும் மக்களாகிய நாமோ, "எங்கே அச்சமாதானம்? எங்கே மனுஷர் மத்தியில் பிரியம்?" என்ற கேள்வியையே கேட்கிறவர்களாயிருக்கிறோம். அடக்குமுறைகளும், மனிதர் மனிதருக்கு விளைவிக்கும் அக்கிரமங்களும், அநியாயங்களும் இன்னும் வளர்ந்து வருகின்றனவே ஒழிய மறைந்துபோகும் அறிகுறிகளைக் காணவில்லை. எனவே தூதர்களின் செய்திக்குக் கருத்தென்ன? பொருளென்ன? வீண் பேச்சோ? என்று நாம் கேட்பது பொருத்தம்.

தூதர்கள் நற்செய்தியைக் கூறின பொழுது சமாதானத்தை ஒரு சம்பவத்தோடு இணைத்துக் கூறினார்கள். "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" இரட்சகரின் பிறப்புக்கும், கடவுளே மானிட ரூபமெடுத்து மானிடர் மத்தியில் தோன்றினதிற்கும் ஒரு தொடர்பு உண்டு சமாதானப் பிரபுவாக வந்தவர் மக்களின் அவஸ்தைகளை அனுபவிப்பவராகவே வந்தார். பிறப்புக்கே இடமில்லாமல் மாட்டுத்தொழுவம், அரசின் எதிர்ப்பினால் அகதியாக ஓட்டம், பிள்ளைகளை இழந்த தாய்மாரின் ஓலம், இன்று எமது அனுபவம்போல் அன்றும் இரட்சகராகிய இயேசுவின் அனுபவமாயிருந்தது.

### மானிடத்தின் அவஸ்தையை சுமந்த இரட்சகர்

மானிடத்தின் அவஸ்தையை தன்மீது சுமந்தே இரட்சகர் இரட்சிக்க வந்தார். சிலுவையில் தன் வாழ்வை ஒப்புவித்தவராகவே, "சமாதானத்தை உங்களுக்கு விட்டுப்போகிறேன், உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை" என்று விளக்கினார்.

மனிதரை பொறியியல் கருவிகளாகவோ, றோபொட்ஸ்கள் ( obots) ஆகவோ பாவித்துக் கடவுள் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது. உலகம் கொடுக்கும் ஒழுங்கும் சமாதானமும், ஆயுதப் பலத்தினால், இராணுவ பெருக்கினால் ஸ்தாபிக்கப்படுகிறது. மனிதரின் சுயாதீனத்தை மதிக்கும் கடவுள், சமாதானத்தை மக்களின் பகைகளையும் பாடுகளையும் சுமக்கும் இரட்சிப்பின் வழியாகவே நிறுவச் சித்தம் கொண்டார். எனவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் தன்னைப் பின்பற்றுபவர்களை தனது திருச்சபையை தன்னுடன் இசைந்து தன்னுடைய வழியிலே "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று அழைக்கிறார். "பிதா என்னை அனுப்பினது போலவே நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று கூறியே "உங்களுக்கு சமாதானமுண்டாவதாக" என்று வழியனுப்பினார். திருச்சபை இன்றும் இச்செய்தியைக் கேட்டு செயல்படுவதே கிறிஸ்மஸ் பண்டிகையை முறையாகக் கொண்டாடுவதாயிருக்கும். "எங்கள் காலத்தில் சமாதானத்தைத் தாரும்" என்று விண்ணப்பிப்பவர்கள், எங்கள் காலத்தில், பாடுபடும் தாசனாகிய இயேசுவின் அழைப்பை ஏற்பதின் மூலமே அச்சமாதானத்தின் கருவிகளாகலாம்.

★



## உத்தமன் தாளினை பணிந்திடுவோம்

பாடுகள் பட்டார் பரமபிதா
பாபிகள் தம்மை இரட்சித்தார்
கேடுகள் அதிகம் புரிந்தவர்க்கும்
கேண்மை காட்டி அருள் புரிந்தார்
நாடுகள் எங்கும் மக்களினம்
நன்றே வாழ வழி சமைத்தார்
ஊடுதல் செய்து எமை நடத்தும்
உத்தமன் தாளினை பணிந்திடுவோம்.

- வாசுகி சிவராமலிங்கம்.

## இயேசு பிரான்

எத்தனை துயர்கள் உலகை மீட்க
ஏற்றவர் தேவபிரான்
ரத்தம் சிந்தி மரித்தவர் உலகம்
வியந்திட உயிர்த்த பிரான்
சத்திய வழியில் நித்திய வாழ்வின்
தத்துவம் சொன்ன மகான்
இத்தரை மீதில் மீண்டும் வருவார்
இறைவன் இயேசுபிரான்

- நெடுந்தீவு லக்ஸ்மன்.

## மக்கள் துயர் துடைக்க தேவனை பிரார்த்திப்போம்

மக்களின் மீட்பர் கடவுளின் குழந்தையாக பிறந்திருக்கிறார். மக்கள் கண்டு, கேட்டு, தொட்டு உணரக் கூடிய அளவிற்கு கடவுள் நம் மீட்பின் செயலை மக்கள் நடுவில் ஆரம்பித்து விட்டார் இது மாபெரும் செயல். மக்களின் அழிவை விரும்பாமல் முழு விடுதலையுடனான வாழ்வு பெற இறை மகன் இயேசு மனிதனானார்.

இன்றைய போர்க்கால சூழலில் மக்களின் துன்பம், துயரம், கண்ணீர் யாவும் பாலகன் இயேசு துடைக்க வேண்டி இறைவனை பிரார்த்திப்போமாக. அதற்கான கருவிகளாக எம் அனைவரையும் உபயோகிக்க எம்மை ஒப்படைப்போமாக.

அருள் திரு. எஸ். பி. நேசகுமார்,
பரி. யோவான் ஆலயம், சுண்டிக்குளி.

## கிறிஸ்து பிறந்த தினத்தில் விடுதலைக்கு வழி பிறக்கட்டும்!

கிறிஸ்துவின் பிறப்பு அடிமைத்தளையில் வாழ்ந்த எல்லோருக்கும் விடுதலை வாழ்வின் நம்பிக்கையைத் தரும் பிறப்பாக அமைந்தது. இன்று வடக்கு-கிழக்கில் வாழும் மக்களும் பல்வேறு அடிமைத்தனங்களின் மத்தியில் வாழ்கின்றனர். அவர்கள் தாம் காலங்காலமாக வாழ்ந்து வந்த, இடங்களையும், தம் பொருள்களையும், அருமை பெருமையானவர்களையும் இழந்து வாடுகின்றனர்; பொருளாதாரத் தடைகளின் மத்தியில் வேலை வாய்ப்பு இன்றி எதிர்காலத்தைப்பற்றி விரக்தியடைந்து நிற்கின்றனர்; வன்செயல்களின் இடையிலும், தொடர்ந்து நடைபெறும் இராணுவத் தாக்குதலின் மத்தியிலும் எப்போதும் பயந்து ஒதுங்கி வாழ்கின்றார்கள். இவ்வடிமைத்தனங்களில் இருந்து நாம் விடுதலை பெற்ற வாழ்வு வாழ வழி பிறக்க வேண்டும் என்று இக்கிறிஸ்மஸ் தினத்தில் ஆசிக்கின்றோம்.

பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பர் ஜனவரி முதல்நாளில் அனுசரிக்கப்படும் 26ஆவது உலக அமைதி தினத்துக்கான தமது செய்தியில் போரினால் எப்பிரச்சினையையும் தீர்க்க முடியாது எனபதனையும், அமைதிக்குக் குந்தகமாக அமையும் வறுமையைப் போக்க நாம் முயற்சிக்க வேண்டும் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே நாமும் அமைதியை, சமாதானத்தை விரும்புகிறவர்களாகவும், வறுமை ஒழிப்பவர்களாகவும் மாறவேண்டும்.

"அமைதிப் பாதையில் நம் காலடிகளைச் செலுத்த வானினின்று இளஞாயிறு நம்பால் எழுந்துவரும்" அமைதியை விரும்புவோர் பலர். ஆனால் அதற்காக உழைக்க விரும்புவோர் ஒருசிலரே. எனவே நாம் அமைதியின் கருவிகளாக மாற, பகை உணர்வுகளையும் நம் உள்ளங்களிலிருந்து அகற்றி உண்மையான சகோதரத்துவத்தை வளர்க்க, மனித நேயத்தில் உயர நத்தார் புதுவருட விழா எம்மை அழைக்கிறது.

எல்லா மக்களும் இன்புற்றிருக்க இறைவன் சாந்தியையும், சமாதானத்தையும் அருள இந்நத்தார் புதுவருடத்தில் இறைவனை வேண்டுகின்றேன்.

வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.
யாழ்ப்பாண ஆயர்

★ வாழ்த்துதல் ★

கிறிஸ்துவின் பிறப்பினால் வரும் நிறைவான புது வாழ்வும் - சமாதானமும் - யாவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல இம்மானுவேலாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரினால் யாவரையும் வாழ்த்துகிறோம்.

நிறைவான புதுவாழ்வின் ஐக்கியம்,
கூளாவடி, ஆனைக்கோட்டை.

(23777)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## வாடகைக்குத் தேவை

இடம்பெயர்ந்த குடும்பத்திற்கு வீடு / அனெக்ஸ் வாடகைக்கு தேவை. இருபாலை, கல்வியன்காடு, கோப்பாய், திருநெல்வேலி பகுதிகள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க: சி. பரமேஸ்வரன் ஐயர், மே/பா திருமதி சுப்பிரமணியம், வைரவகோவிலடி, இராசாவின் தோட்டம், நல்லூர் (23725)

## திருமணசேவை

அவுஸ்திரேலியா, லண்டன், என்ஜினியர் 5, கனடா எக்கவுண்டன், ஜெர்மனி, பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளில் உள்ளவர்களுக்கு மணப்பெண்கள் தேவை. வெளிநாட்டுக்கு ஸ்பொன்ஸர் செய்து அழைக்க தகுதியான மணமக்கள் தேவை. புதன், சனி, ஞாயிறு மட்டும். 9 - 2 மணிவரை. தொடர்புகொள்ளவும்: ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், பழைய இல. 158, ரெம்பிள் றோட், நல்லூர். (23740)

## இலவச திருமண சேவை

37 வயது, ரோகிணி, செவ்வாய்-2, U. K. இல் தொழில் புரிபவருக்கு (விவாகரத்து பெற்றவர்) மணப்பெண் U. K. இல் தேவை. சிங்கப்பூர் விவாகம் செய்தும் அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி. (23722)

27 வயது, திருவோணம், செவ்வாய் 8, B.Sc. Electronic Engineer, U.K. இல் வேலை செய்பவருக்கு வரன் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி. (23720)

## சோதிடம்

கல்வியா? உத்தியோகமா? வியாபாரமா? விவசாயமா? விவாகமா? வெளிநாடு பற்றியா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடன் கிடைக்கும். தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை. மாலை 3 முதல் 6 வரை. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (23759)

## தவறிவிட்டது

சின்னத்துரை புஸ்பராணி ஆகிய நான் மயிலணி பருத்தியோலையிலிருந்து சுன்னாகம் ஊடாக கோண்டாவிலுக்கு செல்லும் வழியில் எனது இல. 687792017V உடைய தேசிய அடையாள அட்டை அடங்கிய சிறிய கைப்பை ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மயிலணி, பருத்தியோலை- சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் (5466)

ஸ்டெதஸ்கோப் (stethescope) முக்கிய சாவிகள், கடிதங்கள் அடங்கிய கைப்பை 21-12-92இல் கச்சேரி நல்லூர் வீதியில் மூத்த விநாயகர் கோவிலுக்குச் சமீபமாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து டாக்டர் சி. கந்தசாமி, வெளிநோயாளர் பிரிவு, யாழ். போதனா வைத்தியசாலை என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (23772)

## நீம் தூபம்-நுளம்பு விரட்டி

நுளம்புத் தொல்லையா? மலேரியா அச்சமா? இருக்கவே இருக்கிறது நீம் தூபம். இரவில் சாம்பிராணி போல் புகைத்து நுளம்பை விரட்டி விமோசனம் காணுங்கள். அண்ணாகோப்பி கடைகளிலும் கிடைக்கிறது 'நீம் தூபம்' மில்க்வைற். (சி-4022)

## O/L கணிதம்

மாணவர்கள் தாமாகவே கற்றலை மேற்கொள்ள பல்வேறு வினாக்களும், செய்கைகளும் அடங்கிய ஆசிரியர் சச்சிதானந்தனின் உதவிநூல் வரிசைகள், மடக்கைகள் விருத்திகள், திரிகோணகணிதம், புள்ளி விபரவியல் ஒவ்வொன்றுக்கும் ரூபா 20. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, மக்மிலன். (5455)

## ஜோதிட விஞ்ஞானம்

வக்கிரச் செவ்வாய், யுரேனஸ், நெப்ரியூன், புளுட்டோ நேரக்கோட்டின் சஞ்சாரம் 14-04-93 வரை உலகில் விமான விபத்துக்கள், இராணுவப் புரட்சிகள், பதவிக் கவிழ்ப்புகள், ஜெயலலிதா உட்பட அரசியல் தலைவர்களின் ராஜினாமாக்கள், உள்நாட்டுச் சண்டைகளையும் தீவிரமாக்கும். Prof: சத்தியதாஸன். (5465)

## ENGLISH

இலகு முறையான ஆங்கிலம் By Kurunathapillai for Years 6+7 Combination of Exercises to Include spoken English. 54/12, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (23763)

## பிரயோக கணிதம்

''நிலையியல் பகுதி - I'', ''காவியும் அதன் பிரயோகங்களும்'', ''மாதிரி வினாத் தாள்களும் விடைகளும்'' ஆகிய நூல்கள் யாழ். நகரம் எங்கும் விற்பனையாகின்றன. ஆசிரியர்: சி. துரையப்பா, B. Sc. (Maths), M. Sc. (Ag. Eng.) (5658)

## நவரச விழா

யாழ்ப்பாணம் டிச. 25

ஜக் அன் ஜில் சிறுவர் பாடசாலையின் நவரசவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.


## தகநாயக்கா ஆஸ்பத்திரியில்

கொழும்பு, டிச. 25

மூத்த அரசியல்வாதியான- தொண்ணூறுவயது நிரம்பிய- முன்னாள் பிரதமர் டபிள்யு. தகநாயக்கா தொடை எலும்பு முறிந்த நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த திங்கள் இரவு காலி றிச்மண்ட் வீதியில் உள்ள தமது வாசஸ்தலத்தில் விழுந்ததன் காரணமாக டாக்டர் தகநாயக்காவின் காலில் முறிவு ஏற்பட்டது. (த-எ)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் வீரகத்தி சிவலிங்கம்

(உதவி அரசாங்க அதிபர்-நானாட்டான்)

தோற்றம்: 17 - 01 - 1946

மறைவு: 06 - 01 - 1992

திதி: 25 - 12 - 1992

அன்புத் தெய்வமே! நாம் வாழ வழிகாட்டிய அன்பின் சிகரமே! எம்மை நல்வழி நடத்திய பண்பின் உறைவிடமே! கலங்கரை விளக்காய் ஒளிதந்து வாழவைத்த குடும்பத்தின் குலவிளக்கே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

'ராஜேஸ்தான்',
கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (5667)

## THANKS GIVING

May the most sacred heart of Jesus be loved adored praised preserved and thanked throughout the world now and forever.

Sacred heart of Jesus have Mercy on us St. Jude maker of miracles pray for us. St. Jude helper of helpless pray for us

A Devotee.

(23771)

## 25 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் ந. க. இராசா

நல்லூர் பிரபல சுருட்டு முதலாளியும், முன்னாள் பண்டாரக்குளம் மருநவளவு பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும்)

பண்புக்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாய் இருந்த எம் அருமைத் தந்தையே! இன்றுடன் நீர் எம்மைப் பிரிந்து இருபத்தைந்து ஆண்டுகள் பறந்து விட்டன. இன்று வரை நாமும், சுற்றமும உங்கள் இரக்க சிந்தையையும், செயல் ஆற்றும் திறமையையும் கதையாத நாளே இல்லை. என்றென்றும் உங்கள் பாசத்திற்கு ஏங்கும்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இராசா டீசல் என்ஜினியர்ஸ்,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (5674)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 - 10 - 1961



மறைவு: 30 - 12 - 1989

பிரபல வைத்தியரும், சோதிட நிபுணருமான மயில்வாகனம் பொன்னுத்துரை மகள்

### செல்வி தேவரதி (ரதி)

திதி: 25-12-1992

ரதியே! உன்னைத்தேடி வந்த எங்கள் கண்களிலே நீ கண்ணீரையல்லவா விட்டுச்சென்றாய்.

உன் நினைவால் வாடும்!
அம்மா, அண்ணாமார், அக்காமார்,
அத்தான்மார், அண்ணிமார்,
பெறாமக்கள்: சி. சந்திரவர்ணன்,
பொ. மகேஸ்வரன்
(புறோக்கர், சாத்திரியார்)

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை. (23770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்திலுள்ள

# கிராமசேவகர் வெற்றிடங்கள்; நிரப்புவதற்கு நடவடிக்கை

வலிமேற்கு, டிச. 25

யாழ். மாவட்டத்தில் வெற்றிடங்களாக உள்ள 100 கிராம உத்தியோகத்தர்கள் பதவிகளையும் நிரப்புவதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

ஆரம்ப நடவடிக்கையாக— அண்மையில் வெளியான கிராம சேவகர் போட்டிப் பரீட்சை முடிவுகளின்படி சித்தியடைந்தவர்களின் பெயர், புள்ளி விவரங்கள் குடாநாட்டின் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளரினால் அனுப்பப்பட்ட மேலதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய படிவங்களும் உதவி அரச அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜனவரி மாதத்தில் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்றும் —

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அப்போது சமுகமளித்திருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் கரவெட்டி உ. அ அ. பிரிவில் 05 வெற்றிடங்களும், சங்கானை உ. அ. அ. பிரிவில் 03 வெற்றிடங்களும், சண்டிலிப்பாய் உ அ அ பிரிவில் 09 வெற்றிடங்களும், கோப்பாய் உ. அ. அ. பிரிவில் 02 வெற்றிடங்களும், உடுவில் உ. அ. அ பிரிவில் 14 வெற்றிடங்களும், தெல்லிப்பளை உ அ. அ. பிரிவில் 13 வெற்றிடங்களும், மருதங்கேணி உ. அ. அ. பிரிவில் 11 வெற்றிடங்களும், ஊர்காவற்றுறை உ. அ. அ. பிரிவில் 9 வெற்றிடங்களும். வேலணை உ. அ. அ. பிரிவில் 15 வெற்றிடங்களும், நெடுந்தீவு உ. அ. அ. பிரிவில் 2 வெற்றிடங்களும். சாவகச்சேரி உ அ அ. பிரிவில் 4 வெற்றிடங்களும், யாழ்ப்பாணம் உ. அ. அ. பிரிவில் 5 வெற்றிடங்களும், நல்லூர் உ அ. அ. பிரிவில் 5 வெற்றிடங்களும், பருத்தித்துறை உ. அ. அ. பிரிவில் 3 வெற்றிடங்களும் மொத்தமாக 100 வெற்றிடங்கள் உள்ளன.

ஆனால் 196 பேர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(த-175)

## கூட்டுறவுச் சங்கங்களின் பங்குப் பெறுமதி அதிகரிப்பு

### மூலதனப் பற்றாக்குறையை நீக்க

வண்ணார்பண்ணை, டிச. 25

மூலதனப் பற்றாக்குறை காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்வர்களின் பங்குகளின் பெறுமதியை நூறுரூபாவால் அதிகரித்துள்ளன.

1992 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கூட்டுறவுத் திருத்தச் சட்ட விதிகளுக்கு அமைய இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தஅதிகரித்த தொகையைச் செலுத்ாதவர்கள் தமது அங்கத்துவ உரிமையை இழந்துவிடுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

(த-162)

## ஜி. சீ. ஈ. உயர்தரம்:

## பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியாகும்

கொழும்பு, டிச. 25

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வார இறுதிக்குள் வெளியாகும்.

இவ்வாறு பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 55 ஆயிரம் பேர் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இதே வேளை—

கடந்த மாதம் நடந்த தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கான பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் பெப்ரவரி மாதளவில் வெளியிடப்படும் என்றும் அவர் சொன்னார்.

## 2, 336 பேருக்கு எதிராக லஞ்சக் குற்றச்சாட்டுக்கள்

இவ்வருடத்தில் இதுவரை 2 ஆயிரத்து 336 பேர் லஞ்சக் குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் கிராமசேவை அதிகாரிகளும், பொலீஸாரும் ஆவர்.

இதேவேளையில் லஞ்சம் பெற்றுக் கொண்ட 83 ஆசிரியர்களும் அகப்பட்டுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(த-எ)

## வல்லைப் பாலம் மேலும் பாதிக்கப்படும் அபாய நிலை

வல்வெட்டித்துறை, டிச. 25

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி சேதமடைந்த வல்லைப்பாலத்தின் ஊடாக வாகனங்கள் தொடர்ந்து செல்வதால், அது மேலும் பாதிக்கப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது.

மினி பஸ்கள், லொறிகள் போன்றவை அதிக பாரத்துடன் செல்வதால் பாலம் மேலும் சிதைவடைந்து, அப்பாதையூடாக போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கும் நிலை ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

சில வாகன சாரதிகள் இப்பாலத்தின் ஊடாக கவனமின்றி, அசட்டையாகச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ–155)

## சிறிமாவை மிகக் கூடுதலான வாக்கால் தோற்கடிப்பேன்

### ஜனாதிபதி பிறேமா சொல்கிறார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடுவாரானால் அவரை நான் என்றுமில்லாதவாறு ஆகக் கூடிய பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிப்பேன்.

குருவிற்றையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி பிரேமதாஸா முன்கண்டவாறு கூறினார்.

எனினும், திருமதி பண்டாரநாயக்கா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தாம் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(த–எ)

## நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 25

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பாவனையாளர்களுக்கான மார்கழி மாதத்துக்குரிய இரண்டு வார நிவாரண விநியோகம் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருவதாக பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார் [க]

## கால்நடைகளுக்கு தடுப்பூசி

கிளிநொச்சிப் பகுதியில் இவ் வருடத்தில் கால்நடை திணைக்களத்தினால் மாடுகள், கோழிகள் உட்பட 73 ஆயிரத்து 720 கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்திடம் கால்நடை முதலுதவி பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களும் இணைந்து தடுப்பூசி ஏற்றுவதில் பங்காற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

## நோயாளிகள் அவதி

பேசாலை ஆஸ்பத்திரியில் மருந்துகள் இன்றி நோயாளிகள் கஷ்டப்படுகின்றனர்.

நோயாளர் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மலேரியாவும் அங்கு தீவிரமாக பரவி வருகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த–எ)

## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் சபை - 1993

மேற்படி கோவிலுக்கு 1993ஆம் ஆண்டிற்கான வழிபடுநர் சபை உறுப்பினர்களாகச் சேரவிரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமை உள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை "பொருளாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று, விண்ணப்பத்துடன் சேர்த்து 1992 ஆம் ஆண்டுமார்கழி மாதம் முப்பத்தோராந் திகதி (1992 - 12 - 31) மாலை ஐந்து மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக "செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற முகவரியிட்டு கடித மூலம் அனுப்புமாறும் அல்லது கோவில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம்" என குறிக்கப்படல் வேண்டும்.

### வழிபடுநர்சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:

1. (அ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயதிற்கு மேற்பட்டவராகவும்,
   (ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்.
   (இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநராகவும்,
   (ஈ) இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகுதியுடையவர் ஆனால், அப்படிப்பட்ட ஒருவர்,
2. (அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்கு கால நித்திய பூஜை ஒன்றில் உபயகாரராக இருப்பாராயின் அல்லது,
   (ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மஹோற்சவத் திருவிழாக்கள் உட்பட எந்தவொரு விசேட நைமித்திய உற்சவ பூஜை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும் மேற்கூறிய நித்திய விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள் மஹோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ, வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரை (அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/-) செலுத்தலாம். தகைமையற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரை (அ) அல்லது (ஆ) வின்படி,
   (இ) தனது விண்ணப்பப் படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது (50/-) "பொருளாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும்.
3. அத்துடன், எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும்,
4. இக்கோவிலின் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகளைப் பெறாத ஒருவராகவும்,
5. இக்கோயிலில் இலாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.
6. குறிப்பு: விண்ணப்பதாரரின் கையொப்பம் ஒரு சாமாதான நீதிவான், இந்து மதகுரு இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் றப்பர் முத்திரை மிக முக்கியம்.
7. ரூபா மூன்று (3/-) செலுத்திக் கோவில் காரியாலயத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாக. குமாரசூரியர்,
செயலாளர்,
அறங்காவலர் சபை.

ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்.
நயினாதீவு.
1992 – 11 – 15 (சி-4039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் தாய்மாரை வெளிநாடு அனுப்ப

# குழந்தைகளைப் பிணையாக கேட்ட தொழில் ஏஜென்ஸி!

கொழும்பு, டிச. 25

குழந்தைகளைப் பிணையாக வாங்கி வைத்துக் கொண்டு அவற்றின் இளம் தாய்மார் வெளிநாடு சென்று தொழில் புரிவதற்கு நிதி மற்றும் வசதிகளை வழங்கும் தொழில் ஏஜென்ஸி ஒன்றைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்

சம்பந்தப்பட்ட தொழில் ஏஜென்ஸி இப்படி பிணையாக வைக்கப்பட்ட பல குழந்தைகளைப் பராமரித்து வருவதாகவும்—

அக் குழந்தைகளின் பராமரிப்புக்காக வெளிநாட்டில் உள்ள தாய்மார்கள் அந்தத் தொழில் ஏஜென்ஸிக்கு பணம் அனுப்பி வந்தனர் என்றும் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடு சென்ற சந்திரவதி என்ற பெண்ணால் பிணையாக தொழில் ஏஜென்ஸி ஒன்றிடம் ஒபபடைக்கப்பட்ட தமது இரு குழந்தைகளை மீட்டுத்தரும்படி அக்குழந்தைகளின் தந்தையாரான மாவத்தகமயைச் சேர்ந்த அர். சிரிசேன என்பவர் தாக்கல் செய்த வழக்கின் விசாரணையில் இத்தகவல்களை மனுதாரரின் வழக்கறிஞர் வெளியிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் திருமணச் சான்றிதழ் மற்றும் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டதுடன் குழந்தைகள் இருவரையும் தந்தையிடம் ஒப்படைக்கும்படியும் உத்தரவு பிறப்பித்தார். (த-எ)

## புகையிலை நாற்று ஒரு ரூபா!

மந்திகை, டிச. 25

வடமராட்சிப் பகுதியில் புகையிலை நாற்று ஒன்று ஒரு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இம்முறை அதிகமானோர் புகையிலைச் செய்கையில் நாட்டம் காட்டுவதால் புகையிலை நாற்றுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. (ஒ-ரி)


G. A Q. — 94

பேராதனை பல்கலைக் கழகத்திற்கான

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

B A Part - I

B Com. Part - I

யாழ். பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகளும் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு:

எஸ். அருள்நங்கை,

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-4041)



தேவை

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கம் (AROD)

16, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்,

ஊனமுற்றோரின் பாவிப்பிற்காக கீழ்க்கண்ட உபகரணங்கள் தேவைப்படுகின்றன

(1 தையல் இயந்திரம் தேவை (Sewing Machine

(2) முச்சக்கரவண்டி (Tricycle)

(3) இருசக்கர தள்ளுவண்டி (Wheel Chair)

(4) செவிப்புலனற்றோர் பாவிக்கும் உபகரணங்கள் - (Hearing aids)

(5) மூக்குக் கண்ணாடி (Spectacles)

ஊனமுற்றோர் பாவிக்கும் வேறு உபகரணங்கள்.

மேற்படி உபகரணங்கள் (புதியவை அல்லது பழையவை) அன்பளிப்பு அல்லது விற்பனைக்கு இருப்பின் மேற்குறிப்பிட்ட சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இந்த உபகரணங்கள் ஊனமுற்றோருக்காக எமது சங்கத்தின் பின்வரும் செயல்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்.

- ✶ தொழிற்பயிற்சி
- ✶ சுயதொழில் முயற்சிக்கான உதவி
- ✶ தொழிற் பயிற்சியின்போது விடுதி வசதி
- ✶ கல்வி வசதி
- ✶ வேறு உதவிகள்

(23757)


## இன்னிசை

யாழ்ப்பாணம், டிச. 25

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ராஜன்ஸ் இசைக் குழுவினரின் "இன்னிசை மழை" நிகழ்ச்சி 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)

## நிவாரணம்

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ்ப்பாணத்தில் வதியும் நெடுந்தீவு மக்களுக்கு மீண்டும் உலர் உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

அரச அதிபர் அனுமதியளித்ததை தொடர்ந்து புங்குடுதீவு ப நோ கூ. சங்கக் கிளையில் விநியோகம் ஆரம்பமாகியுள்ளது. (ஓ-111)

## 'பிச்சைக்காரர்' தலைவி கைது!

கொழும்பு, டிச. 25

சிறுவர்களை பிச்சை எடுப்பதற்குப் பயன்படுத்தி, வருமானம் தேடி வந்ததாகக் கூறப்படும் கோஷ்டி ஒன்றைச் சேர்ந்த தலைவி புறக்கோட்டைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இளம் பெண்ணான இவர் இரண்டரை வயதான பாலகன் ஒருவனை கையில் காயப்படுத்தி- அவனை பிச்சை எடுக்கும் தொழிலுக்கு ஏற்றவனாக மாற்றியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## தொலைக்கல்வி ஆசிரியர் ஆங்கிலப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 25

நாளை 26ஆம் திகதி நடைபெற இருந்த தொலைக்கல்வி ஆங்கில ஆசிரியர்களுக்கான முதல் நிலைப் பரீட்சை இம்மாதம் 28ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது.

இப் பரீட்சை அன்றைய தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் (க)

## வகுப்புகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ். புனித மரியாள் பாடசாலையில் இயங்கும் நளா கல்வி வளர்ச்சிக் கழக வகுப்புக்கள் 28ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் அரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது. (க)

## ஒளிவிழா

தென் இந்திய திருச்சபையின் வட்டுக்கோட்டை ஆசன ஆலய ஒளிவிழா 28ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

அராலி மேற்கு கொட்டைக்காடு பிள்ளைகள் விழா 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறும். (க-ரி)

## அறத்தமிழ் அகராதி

பருத்தித்துறை விநாயகர் தருமநிதியம் தொடர்ந்து பல நூல்களை வெளியிட்டு விநியோகித்து தமிழ்ப் பணி செய்து வருகின்றது.

தற்போது இந்நிதியம் "அறத்தமிழ் அகராதி" என்ற பெயரில் தமிழ்-தமிழ் அகராதி ஒன்றை வெளியிட்டு, அதைப் பொது நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்குகின்றது. (க)

## வடக்கு-கிழக்கு யுத்தத்தின்

# இருபக்க உண்மைகளையும் ரூபவாஹினி வெளியிடுமாம்

## பிரேமாவின் உத்தரவில் புதிய நிகழ்ச்சி

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் இருபக்கத்து உண்மைகளையும் வெளிநாட்டார் அறிந்து கொள்ளும்வகையில் ரூபவாஹினியில் நிகழ்ச்சி ஒன்றை நடத்தும்படி ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த வாரம் உத்தரவு பிறப்பித்தார்.

இத்தகவலை உபசபாநாயகர் காமினி பொன்சேகா வெளியிட்டார்.

படையினருக்குரிய அன்பளிப்புகளைக் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் இதனைத் தெரிவித்தார். (த-எ)


யாழ். விவசாயிகளுக்கு

ஒரு முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட கமநலசேவை நிலையங்களில் தற்போது இருப்பில் உள்ள பின்வரும் பசளைகள், கீழ்க் குறிப்பிடப்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இப்பசளை வகைகளைப் பிற ஸ்தாபனங்களுக்கு மொத்தமாக விற்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே, 05-01- 993 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் உங்களது எதிர்காலத்தேவைக்கான பசளைகளை உடனடியாகக் கமநலசேவை நிலையங்களில் பெற்றுக் கொண்டு, ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

| பசளை இனம்: | விலை (50 கிலோகொண்ட பொதி) |
| --- | --- |
| 1. அமோனியம் சல்பேற் | ரூபா 490/- |
| 2. ரி எஸ். பி. | ரூபா 710/- |
| 3. எம். ஓ பி | ரூபா 632/- |

ஆ. சிவசுவாமி

சிரேஷ்ட கமநலசேவை உதவி ஆணையாளர்,

யாழ்ப்பாண மாவட்டம்.

கமநலசேவைகள் திணைக்களம்,

யாழ்ப்பாணம். 1992-12-25 (சி-4044)



யாழ்ப்பாணம்

ப. நோ. கூட்டுறவுச் சங்கம் (வ. து.)

அங்கத்தவர் கவனத்திற்கு

அன்புடையீர்,

உங்கள் பங்குப்பணம் ரூபா 100/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது 05 - 03 - 1993 ஆம் ஆண்டிற்கு முன்னர் பங்குப்பணத்தை செலுத்தாவிடின் ப. நோ. கூ. சங்கத்தின் அங்கத்துவ உரிமையை இழந்து விடுவீர்கள்.

- தவறவிடாதீர்கள்
- இன்றே விரையுங்கள்
- நன்றே செய்யுங்கள்

விவரங்களுக்கு:

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்;

" தாம் மற்றவர்களுக்காகவும் - மற்றவர்கள் நமக்காகவும் "

சொலமன் சூ. சிறில், தலைவர்.

பு. நவரட்ணம், செயலாளர்.

24 - 12 - 1992. (சி-4045)



நத்தார் தின

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

25 - 12 - 1992 மாலை 3-00 மணி

| | | |
| --- | --- | --- |
| ஶ்ரீகாந் A வி. க. (தென்மராட்சி | — | கோல்ட் ஸ்ரார் A (கோப்பாய் வடக்கு) |
| யங்ஹோயல் A (காங்கேசன்துறை) | — | கணேசன் A (அளவெட்டி) |
| ஶ்ரீமுருகன் (மயிலங்காடு) | — | ஹோயல் (ஊரெழு) |

இடம்: கோல்ட் ஸ்ரார் மைதானம், கோப்பாய் வடக்கு.

(23774)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நத்தார் சிந்தனை

இன்று கிறிஸ்தோதயத் திருநாள் இறைமகன் இயேசு மனிதனாக வந்து உதித்த மகத்தான நாள். மக்களின் அழிவை விரும்பாமல் அவர்கள் முழு விடுதலை உடையவர்களாக வாழ்வு பெறுவதற்காக அவதரித்தவர் இயேசு. அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சுதந்திரமில்லாது நசுக்கப்பட்ட மக்களின் அவலத்தைப் போக்குவதற்காகப் பிறந்தார் அவர்.

அதனால் அடிமைத் தளையில் வாழ்ந்த சகலருக்கும் விடுதலை வாழ்வின் நம்பிக்கையைத் தரும பிறப்பாக இயேசுவின் பிறப்பு அமைந்தது. மானிடத்தின் அவஸ்தையை, தானே அவலத்தை சுமந்து மக்களை இரட்சிக்கும் நோக்குடனேயே கிறிஸ்து நாதரின் பிறப்பு அமைந்தது.

கிறிஸ்துவின் பிறப்பு மட்டுமன்றி அவரது வாழ்வும், வழிகாட்டுதலும் ஈழத்தமிழர்களுக்குப் பல விடயங்களை புகட்டி நிற்கின்றன. தமிழர்களைப் போலவே சுதந்திரமின்றி அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தன்னம்பிக்கையினாலும், விடாமுயற்சியினாலும், கடின உழைப்பாலும் விடுதலை பெற்று சுதந்திர புருஷர்களாக வாழ்ந்தார்கள். அவர்களுக்கு உந்துசக்தியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியவர் இயேசு பிரான்.

சமாதானமும், அமைதியும் சமூக வாழ்விற்கு, மக்களின் நல வாழ்விற்கு, நாட்டின் வளத்திற்கு அவசியம். ஆனால் அடிமைப்பட்டவன் அந்த அவஸ்தையிலிருந்து நீங்கிய பின்னரே, தளையிலிருந்து விடுபட்ட பின்னரே சமாதானத்தைப் பற்றிச் சிந்திக்கமுடியும். இதனை எங்கள் மக்கள் மறந்துவிடக்கூடாது.

அமைதிக்குக் குந்தகம் விளைவிப்பவை எவை? அடக்கி ஒடுக்குதல், உரிமைகளைப் பறித்தல், வறுமை எனப் பலவாகும். இவற்றை ஒழிக்கப் பாடுபடுவதன் மூலமே உண்மையான அமைதி உருவாகும்.

தமிழர்களை அடக்கி ஒடுக்குபவர்கள சிங்களவர்கள் என்பது தெரிந்ததே. ஆனால் அடுத்தவனை அடக்கி ஒடுக்கி, வாய்ப்புகள், வசதிகள் வளங்களைத் தானே அனுபவிக்கவேண்டும் என்று நினைக்கும் தமிழர்களும எம்மிடையே இருக்கிறார்கள்.

தமிழர்கள் மத்தியிலும் லட்சக் கணக்கானோர் வறுமையில் வாடுகிறார்கள். அவர்களை ஆதரித்துச் சேவை செய்ய முன்வருவோர் எம்மில் எத்தனை பேர்? புகழுக்காகச் சேவை செய்வது உண்மையான சேவையல்ல. மனம் விரும்பி அடக்கமாகச் செய்யும் சேவையே மகிமையுடையது.

மொத்தத்தில், சிங்களவர்களின் அடக்கு முறையிலிருந்து விடுபடுவதற்கு போராட்டம் நடத்துவது போலவே, தமிழர் சமூகத்தில் புரையோடி உள்ள மனிதாபிமானம் இல்லாத சமூகக் கொடுமைகளை விரட்டவும் போராட்டம் தேவை.

இயேசு சமூகத்தை இரட்சிப்பதற்காகப் பல போராட்டங்களை நடத்திய போராளி. அவரது பிறந்த நாளில் எமது போராட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று சிந்திப்பது பொருத்தமானது.

# ஜே.வி.பியினரை விடுதலை செய்தால் அரசைக் கவிழ்க்க முயல்வார்கள்!

## ஜயலத் குழு அறிவிப்பு

கொழும்பு, டிச. 25

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான அதிதீவிர ஜே. வி. பியினர் தங்கள் இலட்சியத்தையும் அபிலாஷைகளையும் எப்பிடியாவது அடையவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

—தடுப்புக் காவலில் உள்ளோரின் நலன் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் ஜயலத் ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் நீதியரசர் ஜி. ஜயலத் லங்காபுவத்துக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தடுப்புக்காவலில் உள்ள ஜே. வி பியினர் தங்களின் மார்ச்ஸீய மற்றும் முதலாளித்துவ எதிர்ப்புக் கொள்கைகள் சரியானவையே என்று இன்னமும் கூறிவருகின்றனர்.

அவர்களில் சிலர் வன்செயல் மூலம் தங்களது இலட்சியத்தை அடைவோம் என்று கூறுகின்றனர். வன்செயலை விரும்பாத மற்றும் சிலர் யாரையாவது கொலை செய்தாவது தங்கள் இலட்சியத்தை அடைவது உறுதி என்கின்றனர்.

இவர்கள் தங்களை அரசியல் கைதிகளாக நடத்தவேண்டும் என்றும் கோரி வருகின்றனர் அரசியல் கைதிகளுக்குரிய சிறப்புரிமைகள் மற்றும் சலுகைகள் தங்களுக்கு வழங்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் அல்லர் எனக் கூறும் அவர்கள், சாத்தியமான வழிகளில் தங்கள் இலட்சியத்தை அடைவோம் என்கின்றனர்.

தடுப்புக் காவலில் உள்ள ஜே வி. பியினர் சிலர் இன்னும் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்களை விடுதலை செய்தால் அவர்களின் நடமாட்டம் குறித்து கவனமாக இருக்கவேண்டும். போதுமான சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் சிலர் விடுவிக்கப்படலாம். அவர்கள் வெளியில் சென்றவுடன் ஜே. வி. பிக்கு புத்துயிர் அளிக்க முயற்சி செய்வார்கள்.

இவர்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்று காணும் இடத்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டும்.

இன்னொரு பக்கத்தில் அவர்களை அரசியல் கைதிகளாகக் கணிக்குமிடத்து அவர்கள் குறித்து நாம் கவனமாக இருக்கவேண்டும். தமது நோக்கத்தை அடைவதற்காக அவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் முயற்சிப்பார்கள். ஆகவே இவர்களை விடுவிக்கும்போது உஷாராக இருக்கவேண்டும். இவர்களைத் தடுத்து வைத்திருப்பதன் மூலம் ஜே. வி. பி புத்துயிர் பெறுவதை அரசாங்கம் தடுத்துள்ளது. இலட்சியத்தை அடைய பலாத்காரம் சரியான அணுகுமுறையாகாது என்பதை அவர்களுக்கு உணர்த்துவது கடினமான காரியமாக உள்ளது. இப்படி அவர் கூறினார். (உ-எ)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# புலிகளுக்கு உறுதுணையாக துணைப்படைப் பிரிவினர்!

விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டு வரும் துணைப்படைப் பிரிவு முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரியதோர் அமைப்பாக பரிணமித்து வருகிறது என்றும் —

துணைப் படையினர், விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வயோதிபர்கள், இளைஞர்கள் என்ற வேறுபாடின்றி பலர் விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்று — மண்ணைக் காக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும்—

74 வயது வயோதிபர் முதல் பெரும் எண்ணிகையானோர் அங்கு துப்பாக்கி ஏந்தியுள்ளனர் என்றும், தெரிவிக்கப்பட்டது.

தமிழீழத்தை இரண்டாக பிரிக்கும் நோக்கோடு மணலாறுப் பிரதேசத்தை தனது நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் கீழ் கொண்டு வர அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது,

அங்கு சிங்களக் குடியேற்றங்களை மேலும் விஸ்தரிப்பதற்காக சிங்களவர்களுக்கு ஆண், பெண் என்ற வேறுபாடின்றி பயிற்சி வழங்கி நவீன ஆயுதங்களையும் வழங்கி வருகின்றது.

அரசின் இத்தகைய முயற்சிகளைத் தடுக்கும் நோக்குடனே முல்லைத்தீவு மாவட்டத்தில் — குறிப்பாக மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகவே தற்போது அங்கு கட்டமைக்கப்பட்டு வரும் துணைப்படை அமைப்பினரும் சேர்ந்து செயற்பட்டு வருகின்றனர். (ஓ 5)

# போர் முனைகளுக்கு அனுப்ப 2,000 முதலுதவி பெட்டிகள்!

வடக்கு - கிழக்கு போர் முனைகளில் உள்ள ஆயுதப் படையினரின் பாவனைக்கு என்று 2 ஆயிரம் முதலுதவிப் பெட்டிகள் அனுப்பி வைக்கப் படவுள்ளன

முதலுதவிப் பெட்டிகளைத் தயாரிப்பதில் இராணுவம் தற்போது ஈடுபட்டிருக்கிறது.

போர்முனைகளில் தாங்கள் பணிபுரியும் இடங்களில் முதலுதவி வைத்திய வசதிகள் கிடைப்பதில்லை என்று இராணுவத்தினர் முறையிட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுளதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதே வேளை—

படையினரின் குடும்பங்களுக்கு அவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளில் முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது (ஓ-எ)

# ஒரு லட்சம் பனம் விதைகள் இவ்வாண்டு நடப்பட்டன

யாழ்ப்பாணம், டிச. 26

நிதிப் பற்றாக்குறை மற்றும் போக்குவரத்து வசதிகள் இல்லாத போதிலும் பனை அபிவிருத்திச் சபை இவ்வாண்டு ஒரு இலட்சம் பனம் விதைகளை நாட்டியுள்ளது என பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது,

பனை நடுகை வாரத்தையொட்டி சபை யாழ்ப்பாண மாநகரப் பிரதேசம், பூநகரி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் பல்வேறு ஸ்தாபனங்களின் உதவியுடன் இப் பனம் விதைகள் நாட்டப்பட்டன.

யாழ். மாநகரசபையின் உதவியுடன் கோண்டாவில் குடிநீர்த் திட்டத்திற்குரிய— 10 ஏக்கர் காணியில் — ஐயாயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டன. இதன் மூலம் எதிர்காலத்தில் மாதிரிப் பனந்தோப்பு ஒன்று உருவாக்கப் படக்கூடியதாக இருக்கும்.

இதேவேளை யாழ். றோட்டரிக் கழகம், யாழ். சனசமூக நிலையங்களின் சமாசம், லயன்ஸ் கழகம், அறவழிப் போராட்டக் குழு மற்றும் தனியார் உதவியுடன் வெற்றுக் காணிகள், பெருந்தெருக்கள் ஆகிய இடங்களில் பனம் விதைகள் நாட்டப்பட்டன.

பூநகரிப் பகுதியில் பூநகரி ப நோ. கூ. சங்கத்தின் உதவியுடன் 20 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டன. முல்லைத்தீவுப் பகுதியில் 50 ஆயிரம் பனம விதைகள் நாட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

— இவ்வாறு சபை தெரிவித்துள்ளது. (உ)

## முப்பெரும் விரிவுரைகள்

யாழ்ப்பாணம். டிச, 25

மெய்கண்டதேவர் ஆதீன சைவ சித்தாந்த உயர் நிறுவனத்தின் ஆதரவில் முப்பெரும் விரிவுரைகள் நடைபெற உள்ளன.

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் இத்தொடர் விரிவுரைகளில் நாளை காலை திருவுந்தியார் குறித்து மூதறிஞர் க. சி. குலரத்தினம் உரை ஆற்றுவார். ஞாயிறு காலையில் சிவஞானசித்தியார் குறித்து சித்தாந்தமணி மு. திருஞானசம்பந்தபிள்ளையும், மாலையில் சிவஞான பாடியம் குறித்து சித்தாந்த ஊழியன் க. கணபதிப்பிள்ளையும் உரையாற்றுவர். (அ)

## பணிப்புரை

கொழும்பு, டிச. 25

1993 ஜூலை வரையான காலப்பகுதிக்குரிய செயற்பாட்டு பணிப்புரையை கூட்டுப்படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா விடுத்திருக்கிறார்.

வடக்கு – கிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண உதவுமுகமாக விடுதலைப் புலிகளை அழிப்பதில் முன்னேற்றங்காணவேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்கு ஆயுத படைகளில் உள்ள கட்டளைத் தலைமைகள் எல்லா மட்டத்திலும் கூட்டாகச் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு எமது பங்களிப்பைச் செய்வதன் மூலம் நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். அந்தத் தனி இலட்யத்தை நோக்கி படிப்படியாக முன்னேற அனைவரும் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும் —இவ்வாறு அந்தப்பணிப் புரையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## யாழ் நகரில் இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 25

'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறையிலிருந்து யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டன.

174 பொதிகளி பருத்தித்துறை தபாலகத்துக்குரிய 17 பொதிகள் தவிர்ந்த ஏனைய பொதிகளே இங்கு எடுத்து வரப்பட்டன.

நத்தார் தினமான இன்று யாழ். நகரப்பகுதியில் தபால்கள் விநியோகிக்கப்படும் என்றும் —

ஏனைய உபதபாலகங்களுக்குரிய தபால்களும் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

### சைக்கிள்காரர்கள்...

(1 ஆம் பக் கத்தொடர்ச்சி)

டம் முடிவதற்கு இன்னும் ஏழு நாட்களே இருக்கும் தறுவாயில் லைசென்ஸ் தகடுகளைப் பெற்றனர்.

கடந்த திங்கட்கிழமை நல்லூரில் உள்ள யாழ். மாநகர சபை அலுவலகத்துக்கு முன்னால் சென்ற சைக்கிள் காரர்கள் பலரும் திடீர் பரிசோதனைக் குழுவினரிடம் அகப்பட்டு லைசென்ஸ் தகடுகளை பெற்றனர். (அ-17)

### பாரதிய.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தர்னிகள் தெரிவிக்கின்றனர்

இதற்கிடையில் —

தமிழகம், கோயம்புத்தூரில் விரைவில் இந்து முன்னணியின் ஆதரவுடன் விஷ்வ ஹிந்து பரிஷத்தின் தேசிய மாநாடு நடைபெற உள்ளது என்றும்—

இம்மாநாட்டில் பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களான எல் கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

பிராமண சமூகத்தைச் சேர்ந்த ஜெயலலிதா இந்து தீவிரவாதப் போக்குடைய பாரதிய ஜனதாக் கட்சியை ஆதரிப்பதில் வியப்பில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ-ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். இந்து, வேம்படியில்

# ஆண்டு 6 வகுப்புகளுக்கு மாணவர் அனுமதி முடிவு

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ். மாவட்டத்தின் இரு தேசியக் கல்லூரிகளிலும் 1993 இல் ஆண்டு - ஆறு வகுப்புக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு விட்டனர்.

யாழ். இந்துக் கல்லூரியில் ஆண்டு — ஆறு வகுப்புக்கு அனுமதி கோரி விண்ணப்பித்தவர்களில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 139 க்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கும் —

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு விண்ணப்பித்தவர்களில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 136 க்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவிகளுக்கும் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு தேசியப் பாடசாலைகளிலும் ஆண்டு— ஆறு வகுப்புக்குகளில் மொத்தமாகவுள்ள 420 இடங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இம்முறை எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இம்முறை இந்தப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதால் தேசியப் பாடசாலைகளில் அனுமதி பெறும் வாய்ப்பு சித்தியடைந்த எல்லா மாணவர்களுக்கும் கிடைக்காத நிலை ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

(ஒ-5)

## யாழ். ஏரியில் படகு மீது தாக்குதல்

கொழும்பு, டிச. 25

யாழ் கடலேரியில் தீவிரவாதிகள் சென்ற படகு ஒன்றை கடற்படையினர் அழித்ததாக இராணுவத்தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது

கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் படகு தீப்பிடித்துச் சிதறியதாக தெரிவிக்கப்பட்டது.

(உ-5-6)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சின்னம்மா

சின்னத்தம்பி சின்னம்மா 24-12-92 நேற்று காலமானார். இவர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், சி. சண்முகலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ் வளாகம்), சி. மகாலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. பவளநாயகி, ம. குலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிதரன், தயாநிதி, மேனகா, விஜிதன், பகிரதன், ஜனார்த்தனன், பத்மாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (26 12-92) நாளை காலை 9.00 மணிக்கு இல 45/2, கலைமகள் வீதியில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
சி. சண்முகலிங்கம்
(மகன்)

45/2, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(23781)

## திருமதி சின்னத்தம்பி தங்கமுத்து

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது இரத்தினபுரம், கிளிநொச்சியில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்தம்பி தங்கமுத்து 22-12-92 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் ஆச்சிமுத்து, நல்லதங்கம், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, செங்கமலம், ஆறுமுகம், நாகலிங்கம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும்' காலஞ்சென்ற பேரம்பலம். மற்றும் தாமோதரம்பிள்ளை (கிளிநொச்சி), கண்ணம்மா, கண்ணையா (கிளிநொச்சி), காலஞ்சென்ற தருமலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிள்ளையம்மா, தனலெட்சுமி, செல்லத்துரை, சறோஜினிதேவி, காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், ராதாகிருஷ்ணன் (சுவிஸ்), செல்வமலர் (சுவிஸ்), ஆனந்தி (சுவிஸ்), சுரேஸ்குமார் (சுவிஸ்), குகேந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி. மாணவன்), தயாளினி (பிரான்ஸ்), தஷந்தினி, தாட்சாயினி, மனோரஞ்சினி, மூர்த்தி (வர்த்தகர்), சச்சிதானந்தன் (பிரான்ஸ்), இராமானுஜம், மோகனதாஸ் (பிரான்ஸ்), தர்சினி, சுபாசினி, (யாழ். இந்து மகளிர் கல்லூரி. மாணவி) கதீஸ், சுபா, தர்ஷி, கனா, அசோக்குமார் ஆகியோரின் அன்பு பேர்த்தியும். சகானா (சுவிஸ்), சுஜீவன் (புனித ஜோன் பொஸ்கோ மாணவன்), ரஜீவன், சுஜீதா, சஜீதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-12-92 வியாழக்கிழமை இரத்தினபுரம், கிளிநொச்சியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நா. செல்லத்துரை
(மருமகன்)

125/1 இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

[23776]

## நரசிம்மராவ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் ஆதிக்கத்துக்கும் எதிராகப் போராடுவது.

★ மறைந்த தமிழக முதல்வர் அண்ணாத்துரையின் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுவது,

—ஆகிய இரு உறுதிமொழிகளையும் செல்வி ஜெயலலிதா எடுத்துக் கொண்டார்.

அண்மையில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரைக் கொண்ட இராணுவ அணிகளை மத்திய அரசு தமிழகத்துக்கு அனுப்பியதும்—

ஜெயலலிதாவின் மாநில அரசைக் கலைப்பதற்கு முன்னேற்பாடாகவே இராணுவ அணிகள் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டன என்று செய்திகள் வெளியாகியதும் தெரிந்தவையே.

ஜெயலலிதாவின் அரசைக் கலைப்பதை நோக்கமாகக் கொண்டு டாக்டர் சுப்பிரமணியசுவாமி தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் தமிழக நல்லாட்சி இயக்கத்துக்குப் பின்னணியில் பிரதமர் ராவ் செயற்படுவதாகக் கூறப்படுவதும்—

இது பற்றி பேசுவதற்காக புதுடில்லி சென்ற ஜெயலலிதாவுடன், தமிழ் நாட்டில் வெள்ள நிலைமை தவிர ஏனையவிடயங்கள் குறித்துப் பேச பிரதமர் ராவ் மறுத்துவிட்டதாகக் கூறப்படுவதும்—

இராணுவ அணிகளைத் தமக்குத் தெரியாமல் பிரதமர் ராவ் தமிழகத்துக்கு அனுப்பியது தவறு எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா கருதுவதும்—

ஜெயலலிதாவின் சீற்றத்துக்குக் காரணங்கள் எனக் கூறப்படுகிறது (உ 6)

## கிளாலிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொதிகள் வைத்திருந்தார் அவற்றில் ஒன்றை மட்டுமே படகோட்டியிடம் கொடுத்தார். அடுத்த பொதியைத் தருமாறு படகோட்டி எவ்வளவு வற்புறுத்தியும் அவர் கொடுக்கவில்லை. அப்படி என்ன பெருந்தொகைப் பணம், நகைகளா வைத்திருக்கிறீர்கள் என்று படகோட்டி சினந்தார். சம்பந்தப்பட்ட பயணி சிரித்துக்கொண்டே ''உம்மிடம் தந்த பையில்தான் அவை உள்ளன'' என்று கூறினாரே தவிர தான் அணைத்துப் பிடித்து வைத்திருக்கும் பையைக் கொடுக்க மறுத்தார்.

ஏனைய பயணிகள் கேட்டுக் கொண்டதன்பேரில் சம்பந்தப்பட்ட பயணியை ஒருவாறு படகோட்டி அனுமதித்தார். அந்தப் பையைத் தருமாறு கேட்பதை நிறுத்திவிட்டார். ஆக இறுதியில், ''ஐயா நான் பையைக் கேட்கவில்லை அதனை எல்லோருக்கும் விரித்துக் காட்டுங்கள்'' என்று கேட்டார். சம்பந்தப்பட்ட பயணி எவ்வித ஆரவாரமும் இன்றி பையைத் திறந்தார்.

அதனுள்ளே .......

கயிற்றினால் பிணைக்கப்பட்ட இரு ஒல்லித் தேங்காய்கள் கண்சிமிட்டின! படகில் இருந்து கடலில் நீந்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அப்போது பயன்படுத்த அதனை வைத்திருப்பதாக அவர் கூறினார்.

அப்போது தான் ஏனைய பயணிகள் முக்கியமான ஒன்றுக்குத் தாம் முக்கியத்துவம் கொடுக்கத் தவறியதை நினைத்துக் கவலைப்பட்டார்கள். தலை குனிந்தார்கள். அவ்வாறு கவலைப்பட்டு சம்பந்தப்பட்ட பிரயாணியை மெச்சியவர்களில் பிரபல மத [illegible]

## ''கரோல்'' இசை நிகழ்ச்சிகள்

இன்று கொண்டாடப்படும் நத்தார் தினத்தை முன்னிட்டு நேற்று இரவு யாழ் நகரின் பல பகுதிகளிலும் 'கரோல்' நிகழ்ச்சி இடம்பெற்றது.

கிறிஸ்தவ இளைஞர்கள் குழுக்களாகச் சேர்ந்து பல பகுதிகளிலும் கரோல் பாடல்களைப் பாடிச் சென்றனர். அவர்கள் வீடு வீடாகச் சென்று, பாடல்களை பாடி மக்களை மகிழ்வித்தனர்.

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 01 — 19'6

மறைவு: 08 — 01 — 1992

## திருமதி பரஞ்சோதி மகேஸ்வரி

திதி: 26 - 12 - 1992

அம்மனும் சிவனுமாக அமைந்த அம்மாவே! கணவரின் பணிக்காகவும், பிள்ளைகளின் உயர்வுக்காகவும், ஈசனிடம் பிடியாத விரதம் எல்லாம் பிடித்துப், புகழும் பெற்று, நன்மதிப்பும் பெற்ற மங்கையர் திலகமே! மறைந்த மாணிக்கமான எங்கள் அம்மாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் நாளை (26 - 12 - 1992) சனிக்கிழமை நண்பகல் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும், கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'புஷ்ப பவனம்',
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(23753)

# மரண அறிவித்தல்

## சிவசுப்பிரமணியம் சிவகுருநாதன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் தற்போது கெருடாவில் சாவகச்சேரியில் வசித்து வந்தவருமாகிய சிவகுருநாதன் (இளைப்பாறிய பிரதம லிகிதர், யாழ். மாநகரசபை-மின்சாரப் பகுதி) நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் சரஸ்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி, லோகநாதன் (கணக்காளர்- டென்மார்க்), கமலநாதன், ஸ்ரீதரன், உதயகுமாரன் B.sc (இந்தியா), கோணேஸ்வரி (உயிரியல் விஞ்ஞான பீடம், முதலாம் ஆண்டு மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுப்பிரமணியம், கௌசல்யா (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் நிரஞ்சன், நிருபா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவஞானம் (இளைப்பாறிய ஆசிரியர்), சிவலிங்கம், சிவானந்தன் (சட்டத்தரணி, லண்டன்), சிவயோகலட்சுமி, காலஞ்சென்றவர்களான சிவஞானலட்சுமி, சிவகாமலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகாமசுந்தரி, கண்மணி அம்மா, பரமேஸ்வரி, பூவேந்திரநாதன் (இளைப்பாறிய பொறியியலாளர்), திருநாவுக்கரசு (இளைப்பாறிய லிகிதர்), தங்கவேலாயுதம் (இளைப்பாறிய சுகாதார அதிகாரி), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கெருடாவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கெருடாவில்,
சாவகச்சேரி.

(23782)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org